## ஊவா மாகாண சபை – 2021

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊவா மாகாண சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பொழிப்பு அறிக்கை 2022 திசெம்பர் 08 ஆந் திகதி வெளியிடப்பட்டதுடன், தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 செப்தம்பர் 16 ஆந் திகதி வெளியிடப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதியொன்று 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் சமர்ப்பிப்பதற்காக ஆளுநருக்கும் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக் கூற்றுக்கள் தென் மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில் 08 வணிக முற்பண கணக்குகளில் ஈட்டப்பட்ட ரூபா 72,397,124 கூட்டுத்தொகையான இலாபம் மாகாண சபை நிதி விதி 510.2 (ஆ) பிரகாரம் வணிக முற்பண கணக்குகளில் இலாப வருமான தலைப்பிற்கு அல்லது நானாவித வருமான தலைப்பின் கீழ் மாகாண சபையின் வசமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்க வில்லை. | அனைத்து வருமானங்களும் காச அடிப்படையில் மாத்திரம் கணக்கு வைக்கப்படும். எதிர்காலத்தில் இந்த வருமானங்கள் மாகாண சபை நிதிய கணக்குகளுக்கு கிடைத்த பின்னர் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | மாகாண சபை நிதி விதி 510.2 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 08 வணிக முற்பண கணக்குகளுக்கு உரியதாக 2021 ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 20,863,181 தொகையான நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு மாகாண சபை நிதி விதி 509.1 இன் பிரகாரம் மாகாண திறைசேரி பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமானத்தேய்வு ஒதுக்கங்களில் அனுப்பிய நிறுவனங்களின் பணம் அந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய நிறுவனங்களின் பணத்தை எதிர்வரும் வருடங்களில் பெற்றுக்கொள்வதற்கு குறிப்பிடப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. | மாகாண சபை நிதி விதி 509.1 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 1990 இன் 08 ஆம் இலக்க ஊவா மாகாண நிதி விஞ்ஞாபனத்தின் X ஆம் அத்தியாயத்தில் பிரகாரம் அறவிடப்படும் முத்திரை | 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் 8 ஆவது பட்டோலையின் 36:6 மற்றும் 1990 இன் 08 ஆம் இலக்க ஊவா மாகாண நிதி | மாகாண சபை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அறவிடப்பட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம் ஆகியவை |

கட்டணங்கள், பிரதேச சபை அதிகார சட்டத்தின் 129(2)(ஆ), நகர சபை அதிகார கட்டளைகள் சட்டத்தின் 158(2)(ஆ) மற்றும் மாநகர சபை கட்டளை சட்டத்தின் 185(2)(இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தினால் பேணிச்செல்லப்படும் நிதியம் ஒன்றுக்கு செலவு வைக்கப்பட வேண்டும். அதற்கமைய ஊவா மாகாண வருமான திணைக்களத்தினால் வருடாந்தம் சேகரிக்கப்படும் முத்திரை கட்டணங்கள் குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் வரையில் மாகாண சபை நிதிக்கூற்றுக்களில் பொறுப்பொன்றாக இனங்காணப்பட வேண்டிய போதிலும் ஊவா மாகாண சபை நிதிக்கூற்றுக்களில் வரி வருமானத்தின் கீழ் இனங்காணப்பட்டிருந்தது. அதற்கமைய மீளாய்வாண்டின் திறந்த வருமான கணக்கின் வரி வருமானங்களின் கீழ் உள்ளடக்கப்படும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய முத்திரை கட்டணம் ரூபா 444,106,516 ஆகும்.

விஞ்ஞாபனத்தின் அறவிடப்படும் முத்திரை கட்டணங்கள் மாகாண நபை நிதியத்திற்கு செலவு வைக்கப்படும். 1993 இன் 05 ஆம் இலக்க ஊவா மாகாண முத்திரை கட்டணங்களை திருப்பும் விஞ்ஞாபனத்தின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் உரிய உள்ளூராட்சி நிறுவனத்தின் பிரதம நிர்வாக உத்தியோகத்தரினால் விடய பொறுப்பு அமைச்சருக்கு 2 வருடங்களை விஞ்சுவதற்கு முன்னர் ஆவணமொன்றின் ஊடாக கோரிக்கை ஒன்றை சமர்பித்த போது மாகாண சபையினால் அந்த முத்திரை கட்டணம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு மீள செலுத்த முடியும். இந்த சட்ட ரீதியாக நிகழத்தக்க பொறுப்பின் தன்மையை கொண்டுள்ளதுடன் வருடாந்த நிதிக்கூற்றுக்களில் அதற்காக செலவின விடய இலக்கம் 1504 இன் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்நிறுவனங்களுக்கு செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ஊவா மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் மற்றும் பிரதி பிரதம செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகத்தின் புத்துருவாகும் பணிகளின் கூட்டுத்தொகையான ரூபா 359,065,520 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு நிறுவனங்களினால் கணக்கு வைப்பதற்கு வழங்கப்படும் தகவல்களில் புத்துருவாகும் வேலைகளின் பெறுமதி சமர்பிக்கப்படவில்லை. | புத்துருவாகும் பணிகளின் பெறுமதியை இனங்கண்டு நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்த வேண்டும். |
| (உ) | விதை உருளைக்கிழங்கு விசேட முற்பண கணக்கின் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 10,379,495 தொகை ஊவா மாகாண சபையின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் ரூபா 9,998,249 ஆக காண்பிக்கப்பட்டமையினால் ரூபா 381,246 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | மாகாண திறைசேரிக்கு ஆரம்பத்திலிருந்த அறவிடப்பட வேண்டிய மீதி குறித்து வைத்துக்கொள்ளப்பட்டுள்ளது. விதை உருளைக்கிழங்கு விசேட முற்பண கணக்கின் அறிக்கையிடலில் எதேனும் வேறுபாடுகள் காணப்படின் அதனை எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மீதியை முற்பண கணக்கில் காண்பிக்கும் மீதியுடன் இனங்க வேண்டும். |
| (ஊ) | 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ஊவா மாகாண ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு, கைத்தவிர்ப்பு, ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் ஒவ்வொன்றாக ஒதுக்கீட்டு | 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட கணக்குகளின் வேறுபாடு கட்டுப்பாட்டு கணக்கில் திருத்துவதற்கு குறித்து வைத்துக்கொள்கின்றேன். | ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மீதியை முற்பண கணக்கில் காண்பிக்கும் மீதியுடன் இனங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்குகளில் குறிப்பிடப்பட்டு அந்த மீதிகளுடன் ரூபா 1,403,860,519 கூட்டுத்தொகையால் இனங்கியிருக்கவில்லை. | | |
| (எ) | 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ஊவா மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பிரதேச செயலக அலுவலகங்கள் உள்ளடங்கலாக மாகாண சபையின் 05 நிறுவனங்களிலிருந்து பெற வேண்டிய ரூபா 26,047,543 மீதியொன்று காணப்பட்டது. | 2022 ஆம் ஆண்டில் தீர்ப்பனவு செய்யப்பட்டவாறு உள்ளது. | ஊவா மாகாண நிதி விதிக் கோவையின் நீ.வி. 366.5.2 இன் பிரகாரம் அதற்கடுத்த வருடத்தின் ஜனவரி 10 ஆம் திகதியில் அல்லது மாகாண திறைசேரிக்கு விதிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ஊவா மாகாண சபையின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் லுஹுˇ பொறியியலாளர் மற்றும் புடவை கைத்தொழில் வணிக முற்பண கணக்குகளிலிந்து மாகாண சபைக்கு அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 4,816,374 ஆனபோதிலும் அந்த வணிக முற்பண கணக்கின் பிரகாரம் மாகாண சபைக்கு தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய மீதி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பணம் வணிக முற்பண கணக்குகளிலிருந்து திரண்ட நிதியத்தினால் செலுத்தப்பட வேண்டிய பொறுப்பொன்றாக இனங்காணப்பட்டு கணக்கு வைப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டு மீள தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். | ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மீதி வணிக முற்பண கணக்குகளில் மீதிகளுடன் இனங்க வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன.

எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு மாகாண திறைசேரி உள்ளடங்களான அந்தந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும். தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பரிவின் பிரகாரம், மாகாண சபையின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான முகாமைத்துவம் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமாக பேணிச் செல்ல தேவையான வேறுபாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.5.1 தலைப்பு 700 – ஆளுநர் அலுவலகம்

**இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2018 ஒக்தோபர் 12 ஆம் திகதிய ‘‘அரச செலவின முகாமைத்துவம்’’ எனும் தலைப்பின் கீழ் வெளியிடப்பட்ட பீஎஸ்/சீஏஎஸ்/11-18 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தி | ஆளுநர் மற்றும் ஆளுநரின் இணைப்பு செயலாளருக்கு மாதாந்தம் ஆகக்கூடிய எரிபொருள் அளவிற்கு உரிய படிகள் வழங்கப்பட்டுள்ள போது 2020 செப்தெம்பர் மாதம் முதல் 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் மேலதிக எரிபொருளுக்காக முறையே 5,247.37 லீட்டர் எரிபொருளுக்கு ரூபா 909,322 மற்றும் 3,420 லீட்டருக்கு ரூபா 426,100 செலுத்தப்பட்டிருந்தது. | மாகாணத்தில் அமைந்துள்ள கடமைகளுக்கு கௌரவ அளுநர் பங்குபற்றும் போது மேலதிக எரிபொருள் பட்டியல்களை விசேடமாக கருதி மீளளிப்பு செய்யப்பட்டுள்ளதுடன் கௌரவ ஆளுனரினால் வழங்கப்பட்ட கட்டளைகளுக்கமைய இணைப்பு செயலாளர் மாகாணங்களுக்கு புறம்பாக கடமைகளை நிறைவேற்றுவதற்கு சமர்பித்த எரிபொருள் பட்டியல்களும் மீளளிப்பு செய்யப்பட்டுள்ளது. | 2018 ஒக்டோபர் 12 ஆம் திகதிய பீஎஸ்/சீஏஎஸ்/11-18 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

1.5.1 தலைப்பு 701 – சபையின் செயலாளர் அலுவலகம்

(அ) இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| 2018 யூலை 18 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் (II) ஆம் பந்தி | சபைச் செயலாளர் அலுவலகத்தின் 30 உத்தியோகத்தர்களுக்கு 2017 ஆகஸ்ட் முதல் 2022 யூன் மாதம் வரையிலும் அடிப்படைச் சம்பளத்தில் 25 சதவீதம் எனுமாறு ரூபா 13,222,231 ஆன விசேட படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | இந்த கொடுப்பனவுக்கு உரியதாக சட்டம் மற்றும் நியாயம் தொடர்பில் விடயங்களை முன்வைக்க குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய மேலதிக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | 2018 யூலை 18 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(ஆ) சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய பீஎஸ்/சீஎஸ்ஏ/11-18 ஆம் இலக்க சனாதிபதி செயலகச் சுற்றறிக்கையின் தவிசாளர் பதவிக்கு 02 உத்தியோகபூர்வ வாகனங்களும் பாதுகாப்பு வாகனமாக 03 வாகனங்களும் சொந்தமானவை. 6 ஆவது ஊவா மாகாண சபையின் | 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைச் சட்டத்தின் பிரிவு 7(2) க்கு இணங்க, மாகாண சபைத் தவிசாளரின் பதவிக்காலம் முடிவடையாது மற்றும் தவிசாளரின் ஊதியத்தைக் குறைக்க எந்த சட்ட ஏற்பாடும் | போக்குவரத்து படியினை வழங்க சுற்றறிக்கையில் ஏற்பாடு செய்யப்படாததால், செலுத்திய தொகையை வசூலிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| உத்தியோகபூர்வ பதவிக்காலம் நிறைவடைந்துள்ள நிலையில், தவிசாளர் பதவி பெயரளவிலான பதவியாக மாறியுள்ள நிலையில், 2019 ஒக்டோபர் 08 ஆம் திகதி முதல் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில், 02 உத்தியோகபூர்வ கார்கள் மற்றும் பாதுகாப்பு கார் ஒன்றும் ஆகியவற்றுக்கு மாகாண சபையின் தவிசாளருக்கு ரூபா 12,960,000 ஆன போக்குவரத்துப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | இல்லை. | |

**(இ) முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | 6 ஆவது ஊவா மாகாண சபையில் அங்கம் வகித்த மாகாண சபை உறுப்பினர்களின் தனிப்பட்ட உத்தியோகத்தர்கள் 187 பேருக்கு, 2019 அக்டோபரில் அவர்களின் சேவையை முடிவடைவதன் பொருட்டு செலுத்தப்படும் இறுதிக் கொடுப்பனவாக மேற்கூறிய அதிகாரிகளுக்கு வழங்கப்படும் மாதாந்திர கொடுப்பனவில் 12 சதவீதம் வரை மற்றும் அவர்கள் பணியாற்றிய மாதங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து, மீளாய்வாண்டின் போது | 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தை அரச திணைக்களங்கள் மற்றும் அமைச்சுகளுக்கு பயன்படுத்த முடியாது. இந்தச் சட்டம் அரச நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் சார்பாக நடைமுறையில் உள்ளதுடன், இந்தச் சட்டத்தின் விதிகளின்படி இந்த பணம் செலுத்தப்படவில்லை. | முறைகேடாக வழங்கப்பட்ட படிகளை மீள அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மொத்தம் ரூபா 8,867,895 பணிக்கொடைகள் வழங்கப்பட்டன. இந்த கட்டணத்திற்கு எந்த சட்ட ஏற்பாடும் காணப்படவில்லை. | | |
| (ii) | 6 ஆவது ஊவா மாகாண சபையின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் முடிவடைந்த பின்னர், பெயரளவிலான பதவியில் இருந்த தவிசாளரின் தனிப்பட்ட ஊழியர்களின் 11 அதிகாரிகள் சார்பாக, 2019 ஒக்டோபர் 08 முதல் 2021 திசெம்பர் 31 வரை, ஊவா மாகாண சபைக்கு எந்தவொரு சேவையையும் பெறாமல், ரூபா.14,034,374 சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக செலுத்தப்பட்டிருந்தது. | 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைச் சட்டத்தின் பிரிவு 7(2) க்கு இணங்க, மாகாண சபைத் தவிசாளரின் பதவிக்காலம் முடிவடையாது மற்றும் தவிசாளரின் வரப்பிரசாதங்களை குறைக்க எந்த சட்ட ஏற்பாடும் இல்லை. | தவிசாளரின் தனிப்பட்ட பதவியணிக்கு பணம் செலுத்துவதற்கு எந்த சட்ட ஏற்பாடும் செய்யப்படாததால், செலுத்தப்பட்ட தொகைகள் திரும்பப் பெறப்பட வேண்டும். |

**1.5.3 தலைப்பு 704 – பிரதான அமைச்சு மற்றும் நிதி மற்றும் கொள்கைத் திட்டமிடல், நீதி மற்றும் சமாதானம், கல்வி, உள்ளூராட்சி, காணிகள், மின்வலு மற்றும் எரிசகத்தி, கட்டுமானம் மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு**

**(அ) இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| ஊவா மாகாண சபையின் நிதி விதி 215.3.1 | ஊவா சமூக வினொலிக்கு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக 2021 திசெம்பர் 31 ஆந் | மாகாண திறைசேரிக்கு பின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. | ஊவா மாகாண நிதி விதிக் கோவையின் 215.3 இன் பிரகாரம் அண்மிய கொடுப்பனவுகளு |

| | | |
|---|---|---|
| திகதியில் உள்ளபடியாக ரூபா 2,486,500 தொகை பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த போதிலும், 2022 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. | | க்காக நிதியேற்பாட்டினை பெற்று ஒதுக்கமாக வைத்திருக்க கூடாது. |

**(ஆ) ஊவா சமூக வானொலி**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| தேசிய சம்பளங்கள் ஆணைக்குழுவின் செயலாளரால் 2022 மார்ச் 07 ஆந் திகதிய ஆம் NSCC/10/79/GE/AL இலக்க கடிதத்தின் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளபடி, மாகாண சபை பொதுச் சேவை உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை தீர்மானிக்க ஆளுநர்களுக்கு நேரடி அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. இருந்தபோதிலும் ஊவா மாகாண ஆளுநரின் அனுமதியுடன் ஊவா சனசமூக | அமைச்சரவைக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்ட காலப்பகுதியில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இந்த ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டது. தேசிய சம்பங்கள் ஆணைக்குழுவின் செயலாளரின் கடிதத்தின்படி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அனுமதியின்றி செலுத்தப்பட்ட கழிவுத் தொகைகளை மீள அறவிட வேண்டும். |

வானொலியின் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் மற்றும் நிகழ்ச்சிகளைக் கொண்டுவருபவர்களுக்கு 5 வீதம் 10 வீதம் 15 வீதம் எனும் அடிப்படையில் ரூபா.1,035,225 ஆன கழிவுத் தொகை 2021 ஆம் ஆண்டு செலுத்தப்பட்டிருந்தது.

**1.5.4 தலைப்பு 706 – விவசாய, நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி, நன்நீர் மீன்பிடி அலுவல்கள் அமைச்சு**

**முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 20 வருடங்களுக்கு மேலாக மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களில் சொத்தாக காட்டப்பட்ட விதை உருளைக்கிழங்கு விசேட முற்பணக் கணக்கின் வரவு மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 10,379,495 ஆக காணப்பட்டதுடன், இந்த மீதி கடன் அடிப்படையில் விதை உருளைக்கிழங்கைப் பெற்ற 398 அதிகாரிகளிடமிருந்து இந்த மீதி மாதாந்தம் வசூலிக்கப்பட வேண்டும். இந்த கடன் கிரமமான முறையில் அறவிடப்படவில்லை என | இந்த கடன் மீதி அறவிடப்பட்டவாறு உள்ளதுடன், கடன் மீதியை வசூலிக்க சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. | கடன் மீதியை உடனடியாக வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் போது 21 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 323,850 மாத்திரம் அறவிடப்பட்டமை உறுதி செய்யப்பட்டது. | | |
| (ஆ) | 2002 இன் பெரும் போகத்தில் பயிர்ச்செய்கைக்காக விவசாயிகளுக்கு விதை உருளைக்கிழங்குகளை இறக்குமதி செய்து விற்பனை செய்யும் செயற்திட்டத்தில் கவனக்குறைவு மற்றும் திட்டமிடப்படாத செயற்பாடுகள் காரணமாக மாகாண சபை நிதியில் ரூபா 29,800,401 ஆன நட்டத்தினை உரிய காலத்தில் அதற்குப் பொறுப்பான அதிகாரிகளிடம் இருந்து வசூலிக்க எந்த நடவடிக்கையும் எடுக்காமல், 20 வருடங்களறின் பின்னர் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்து, மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்தது. | 2002 ஆம் ஆண்டு விதை உருளைக்கிழங்கு இறக்குமதியில் ரூபா 29.8 மில்லியன் மூலதன இழப்பு ஏற்பட்டமைக்கு காரணமான அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஒழுக்காற்று நடவடிக்கைகளில் இருந்து அதிகாரிகள் விடுவிக்கப்பட்டு ஓய்வு பெற்றுள்ளனர்.<br><br>இத்தொகையில் உள்ளடக்கப்பட்டுள்ள விதைகளை இறக்குமதி செய்த நிறுவனத்திடம் இருந்து பெறப்பட வேண்டிய காப்புறுதியின் கீழ் பெறப்படாத ரூபா 4.89 மில்லியன் பெறுமதியானது பலனளிக்காது என சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதன்படி, மாண்புமிகு ஆளுநரின் ஒப்புதலுடன் மேற்படி இழப்பு மற்றும் வசூலிக்கப்படாத தொகை பதிவழிக்கப்பட்டுள்ளது. | நஷ்டத்தை பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடம் இருந்து வசூலிக்க வேண்டும். |

## 1.5.4 தலைப்பு 710 – சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு மகளிர் அலுவல்கள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு

### (அ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் உள்ள வெலிமடை, தியத்தலாவ, மஹியங்கனை ஆகிய ஆதார வைத்தியசாலைகள் மற்றும் பண்டாரவளை மற்றும் பசறை மாவட்ட வைத்தியசாலைகளின் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரை, ரூபா.20,465,781 மதிப்புள்ள மருந்துகள் காலாவதியாகியிருந்ததுடன், ரூபா 4,648,532 பெறுமதியான மருந்து இருப்பானது தரம் குன்றியதாக இனங்காணப்பட்டு பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டன. | 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளைச் சேர்ந்த காலாவதியான மருந்துகள் ஆகும். கோவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக, வெளிநோயாளர் பிரிவு, கிளினிக்குகள் மற்றும் வார்டுகளில் நோயாளர்களின் எண்ணிக்கை 45 சதவீதத்திலிருந்து 70 சதவீதமாக குறைந்துள்ளது, வருடாந்த மதிப்பிடப்பட்ட மருந்துத் தொகை கொழும்பு மருத்துவ வழங்கல் பிரிவினால் வழங்கப்படுகிறது மற்றும் சிலரது பெரும் தொகை கையிருப்பு. குறுகிய காலத்தில் காலாவதியாகும் மருந்துகள், பிராந்திய மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்தமை இந்த நிலைமைக்கு வழிவகுத்தது. | மருந்து இருப்புக்களை கட்டளையிடுதல் மற்றும் விநியோகிப்பதற்கு முறையான நடைமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும். |
| (ii) | மத்திய அரசின் சுகாதார அமைச்சினால் பிபிலை ஆதார வைத்தியசாலையின் வெளி நோயாளர் | இந்த திட்டத்தை செயல்படுத்த சுகாதார அமைச்சின் சுகாதார தகவல் பிரிவின் தொழில்நுட்ப ஆதரவைப் பெறுவதற்கு | இத்திட்டத்தை விரைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரிவினை வலையமைப்பிற்கு உள்ளாக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 1,556,187 பெறுமதியான 5 வகைகளுக்குரிய கணினிகள் மற்றும் வேறு 52 உபகரண அலகுகள் மற்றும் பெறுமதி சமர்ப்பிக்கப்படாத 04 அச்சீட்டு இயந்திரங்கள் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தாமையால் அந்த உபகரணங்கள் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன. | கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | |
| (iii) | மத்திய அரசின் சுகாதார அமைச்சினால் சியம்பலாண்டுவ ஆதார வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவினை வலையமைப்பிற்கு உள்ளாக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 1,617,875 பெறுமதியான 05 வகைகளுக்குரிய கணினிகள் மற்றும் வேறு | 90 சதவீத செயற்திட்டப் பணிகள் முடிவடைந்துள்ளதால், மீதமுள்ள பணிகள் இன்னும் இரண்டு மாதங்களில் முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்டத்தை செயல்படுத்த துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். |

53 உபகரண அலகுகள் 2019 ஆம் ஆண்டு மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தாமையால் அந்த உபகரணங்கள் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

**(ஆ) சுற்றாடல் மற்றும் சமூக பொறுப்புகளை நிறைவேற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| பிபில ஆதார வைத்தியசாலையின் திறந்த வெளியில் நிரம்பி வழியும் பள்ளங்கள் மற்றும் வைத்தியசாலையில் இருந்து வெளியேறும் கழிவுகள் கலப்பு நீர் மற்றும் நச்சு இரசாயனங்களை மறுசுழற்சி செய்யாமல் வைத்தியசாலையின் வடிகால் அமைப்பின் ஊடாக சுற்றுச்சூழலுக்கு விடப்பட்டது. | வைத்தியசாலையின் கழிவுநீர் அமைப்பு மற்றும் நீர் வடிகால் அமைப்புகளை அமைப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்டத்தினால் ரூபா 90 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | முறையான கழிவுநீர் அகற்றும் நடைமுறையை ஏற்படுத்த வேண்டும். |

### 1.5.6 தலைப்பு 711 – கல்வித் திணைக்களம்

#### (அ) ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மத்திய அரசின் கல்வி அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் 2016 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 19 ஆம் திகதி ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தினால் ரூபா.24,932,510 பெறுமதிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட ஹாலிஎல தமிழ் மொழிமூல இரண்டு மாடி ஆசிரியர் பயிற்சி நிலையத்தின் கட்டுமான பணிகள், 2017 செப்டம்பர் 18 ஆந் திகதி முடிக்கப்பட வேண்டும், ஆனால் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முடிக்கப்படவில்லை, மேலும் விதிமீறல் ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒப்பந்தம் முறையாக கையாளப்படவில்லை. இதன் காரணமாக பங்கு பற்றுச்சீட்டுகளை செலுத்தும் போது ஒப்பந்ததாரரிடமிருந்து அறவிடக்கூடியதாக இருந்த ரூபா.1,246,625 தொகையான தாமதக் கட்டணத்தை வசூலிக்க முடியவில்லை. மாவட்டப் பொறியியளாலர் (கட்டிடங்கள்) இனால் ஒப்பந்தத்தை ரத்து செய்ய பரிந்துரை செய்திருந்தார், ஆனால் அவ்வாறு செய்யாததால், மீதமுள்ள பணியை முடிக்க மற்றொரு ஒப்பந்தக்காரரை பணியமர்த்துவது முடியாததாகியிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | நிர்மாணங்களை துரிதமாக மேற்கொண்டு நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

கடந்த 05 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் ஊடக ஆசிரியர் பயிற்சி நடவடிக்கைகள் முடங்கியிருந்த நிலையில், மத்திய அரசின் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த ரூபா.673,000 மதிப்புள்ள 150 விரிவுரை மண்டப நாற்காலிகள் பயன்படுத்தப்படாமல் அழிவடைந்திருந்தன. கணினிகள், மடிக்கணினிகள், ஒளிநகல்கள், மல்டிமீடியா இயந்திரங்கள் மற்றும் பல மரச்சாமான்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருந்தன.

**(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 6-11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் உதவியுடன் கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக மத்திய அரசின் கல்வி அமைச்சினால் 2020 ஆம் ஆண்டு 07 பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட 605 டேப்லெட் கணினிகள் இணையத்தள வசதி இல்லாத காரணத்தால் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பயன்படுத்தப்படவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | இணையத்தள வசதிகளை பெற்று டெப்லட் கணினிகளை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.5.7 தலைப்பு 712 – உள்ளூராட்சித் திணைக்களம்

**உள்ளூராட்சி அதிகாரசபைகளின் கண்காணிப்பு**

**(அ) நிலுவை வருமானம்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மீளாய்வாண்டு மற்றும் கடந்த வருடங்களுக்காக ஊவா மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களினால் அறவிடப்பட வேண்டிய வீதவரி மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 569,098,265 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | நிலுவை வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(அ) வழங்கப்பட்டிருந்த மிகை அறவீட்டுச் சான்றிதழ்களுக்காக அறவிடப்பட்டுள்ள பணம்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ஊவா மாகாண உள்ளூராட்சி அதிகாரசபைகளின் உத்தியோகத்தர்களுக்கு மற்றும் பிரதிநிதிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த மிகை கட்டணத்திற்காக ரூபா 5,724,219 அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. | மாகாண உள்ளூராட்சி அதிகாரசபைகளின் உத்தியோகத்தர்களுக்கு மற்றும் பிரதிநிதிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த மிகை கட்டணம் அறவிடப்பட்டவாறு உள்ளது. | மிகைக் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.8 தலைப்பு 714 – விவசாயத் திணைக்களம்**

**முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

**(அ) நிலுவை வருமானம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பதுளை பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தினால் காளான் வளர்ப்பு வீடுகளை நிர்மாணிக்கு செயற்திட்டத்தின் கீழ் வளர்ப்பு வீடுகளை நிர்மாணிப்பதற்காக நலனாளிகளுக்கு ரூபா 50,000 ஆன உதவித் தொகையொன்று 02 கட்டங்களின் கீழ் வழங்கப்படவிருந்தது. முதலாவது கட்டத்தின் கீழ் உதவு தொகையை வழங்கிய பதுளை மாவட்டத்தின் 07 பிரதேச செயலகப் பிரிவுகளின் 17 நலனாளிகளுக்கு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் ஏற்பாடுகளுக்கு இணங்க குறித்த காளான் பயிர் தயாரிக்கப்பட்டிராத காரணத்தால், இரண்டாவது தவணையை செலுத்துதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன், கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டமையால் ரூபா 340,000 ஆன தொகை 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பொது | காளான் வீட்டின் செயல்பாடுகளை முடிக்காததால் பயனாளிகளில் ஒரு பகுதியினருக்கு இரண்டாம் கட்டமாக பணம் வழங்கப்படவில்லை. கள அலுவலர்களைக் கண்காணித்து மீதமுள்ள நலனாளிகளை ஊக்குவிப்பதன் மூலம் மேலதிக பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. | காளான் வீடுகளின் கட்டுமானம் விவரக்குறிப்புகளுக்கு ஏற்ப உடனடியாக செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த நலனாளிகளுக்கு செலுத்தப்பட்ட ரூபா 510,000 கூட்டுத்தொகையான முதல் தவணைப் பணம் விளைவற்ற செலவினமாகியிருந்தது. | | |
| (ஆ) | உமா ஓயாவில் பயிர்ச் சேதங்களுக்கு விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கும் நடவடிக்கையில், பதுளை பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம், நட்டஈடு விண்ணப்பித்த நாள் முதல் அங்கீகாரம் வரை நீண்ட கால அவகாசம் எடுத்ததன் காரணமாக, விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நட்டஈடு அன்றிலிருந்து 2019 பிப்ரவரி 26 முதல் 2021 ஒக்தோபர் 26 வரை ரூபா.8,691,620 தொகை 2021 டிசம்பர் 31 வரை பொது வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | உமா ஓயா பயிர் இழப்பீடு வழங்குவதற்கான திருத்தப்பட்ட நடைமுறைக்கு 2020 நவம்பர் 17 அன்று அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன், மற்றும் 4046 விண்ணப்பங்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டது. மகாவலி அமைச்சிற்கு அனுமதிக்காக 166 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. பிரச்சனைக்குரிய 15 விண்ணப்பங்களுக்கு, குழு வழங்கும் முடிவுகளின்படி எதிர்காலத்தில் பணம் செலுத்தப்படும். | விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு தொகையை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ஊவா மாகாண விவசாய திணைக்களத்தில் இடம்பெற்றிருந்த காணாமற்போன சம்பள மோசடிக்கு 10 வருடங்களுக்கு மேலாகிவிட்டதோடு, 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா.440,990 ஊவா மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளன. | சட்ட நடவடிக்கைகள் முடிவடைந்ததாக அறிக்கையிடப்படாமையால் இந்த மீதி இன்னும் உள்ளது. | தீர்ப்பனவு செய்யப்படாத தொகையை பொறுப்பான அதிகாரிகளிடம் இருந்து வசூலிக்க வேண்டும். |

## 1.5.9 தலைப்பு 716 – காணிகள் ஆணையாளர் திணைக்களம்

### வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| வணிக அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த 88 நீண்ட கால குத்தகை பத்திரங்கள் 87 குத்தகைதாரர்களுக்கு வழங்கப்பட்டு, அந்த குத்தகைதாரர்களிடமிருந்து ரூபா.75,776,346 நிலுவைத் தொகையினை அறவீடு செய்தல் தொடர்பில் காணிகள் ஆணையாளர் நாயகத்தின் 2021 அக்டோபர் 13, திகதியிட்ட சுற்றறிக்கை இலக்கம் 2021/06 இன் பந்தி இலக்கம் 02 இன் படி செயலாக்கப்படவில்லை. | காணி ஆணையாளர் நாயகத்தின் 2021/06 மற்றும் 2021 அக்டோபர் 13 ஆந் திகதியிட்ட சுற்றறிக்கையின் படி, செலுத்தப்படாத குத்தகைகளை ரத்து செய்து சட்ட நடவடிக்கைகளுக்காக காணிகள் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புமாறு பிராந்திய செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | காணி ஆணையாளர் நாயகத்தின் 2021 அக்டோபர் 13 ஆந் திகதிய 2021/06 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பந்தி இலக்கம் 02 மற்றும் குத்தகை ஒப்பந்தங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 1.5.10 தலைப்பு 717 – விவசாயத் திணைக்களம்

### தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | | |
|---|---|---|
| மெதகொட கலமொட்டரே மஹகும்புர சிறு நீர்ப்பாசன கால்வாய் புனரமைப்பு பணி ரூபா.1,226,740 ஆன செலவினத்தில் 2021 ஆகஸ்ட் 11 ஆந் திகதிக்கு முன்னர் நிறைவு செய்வதற்காக ஊவா மாவெலகம புபுது விவசாயிகள் அமைப்புடன் 2021 மே 11 ஆந் திகதி கையொப்பமிடப்பட்டு, 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 07 மாதங்கள் கடந்துவிட்ட போதிலும், ஒப்பந்தக்காரர் சம்பந்தப்பட்ட பணியை ஆரம்பிக்கவில்லை. | சீமெந்து விலை உயர்வு, சீமெந்து தட்டுப்பாடு போன்ற காரணங்களால், பணியை ஆரம்பிப்பதற்காக விவசாய அமைப்பு நடவடிக்கை எடுக்காததுடன், எந்தவித கொடுப்பனவும் மேற்கொள்ளப்படவில்லை. | ஒப்பந்ததாரர் தொடர்பில் ஒப்பந்தத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.5.11 தலைப்பு 726 – பிரதிப் பொதுச் செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகம்

### (அ) ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| பாடசாலைகளில் அவசர அனர்த்த முகாமைத்துவத்திற்காக ஊவா மாகாண கல்வி அமைச்சினால் ரூபா.2,257,872 தொகை வெலிமடை விஜய கல்லூரியில் 05 மீற்றர் உயரமும் 12 மீற்றர் நீளமும் கொண்ட தடுப்புச்சுவரின் மேல் முனையிலிருந்து பதுளை வீதி வெலிமடை நோக்கி 100 மி.மீ துருத்திக் கொண்டு அபாயகரமான நிலைமை ஏற்பட்டது. | தடுப்புச் சுவருக்கு மேலே உள்ள முற்றம் தண்ணீர் புகாதவாறு அமைக்கப்பட்டுள்ளதுடன், தடுப்புச்சுவரின் துருத்திக்கொண்டிருக்கும் பகுதியை மீண்டும் கட்ட ஒப்பந்ததாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | ஆபத்தான நிலையை குறைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### (ஆ) பெறுகைகள்

| | | |
| --- | --- | --- |
| அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.2 இன் பிரகாரம் பெறுகைகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் அங்கத்தவர்களின் வருகைப் பதிவேடு பேணப்படாத காரணத்தால்அங்கத்தவர்களின் பங்குபற்றலை சான்றுபடுத்த முடியாது, பிரதி பிரதம செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகத்தினால் மீளாய்வாண்டினுள் பெறுகைகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவிற்கான படிகளாக ரூபா 1,225,780 செலுத்தப்பட்டிருந்தது. | கொள்முதல் பணியின் பொறுப்பு மற்றும் நேரத்தைக் கருத்தில் கொண்டு கொள்முதல் குழுக்கள் நடத்தப்பட்டுள்ளன, மேலும் அலுவலகத்தின் வருகையைக் பதிவுசெய்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு கூட்டங்களோ அல்லது பெறுகைகள் குழு கூட்டங்களோ நடத்த வேண்டிய அவசியமில்லை. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.2 இன் பிரகாரம் வருகைப் பதிவுகள் பராமரிக்கப்பட வேண்டும். |

**(இ) மாகாண இயந்திர பணிப்பாளர் அலுவலகத்திற்கான முற்பணக் கணக்கு**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சேவைகளை வழங்கியமைக்காக அறவிடப்பட வேண்டிய கடன் பட்டோர் மீதி ரூபா 49,602,508 ஆக காணப்பட்டதுடன், 2022 யூன் 24 ஆந் திகதியளவில் அந்த மீதி ரூபா 32,966,924 ஆனமையால் கடன் பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடந்த வருடங்கள் தொடர்பான கடன் பட்டோர் நிலுவைகளை அறவிடுவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், கடனை அறவிடும் செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | நிலுவையில் உள்ள கடன் தொகையை வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். |

**1.5.12 தலைப்பு 737 – பிரதிப் பொதுச் செயலாளர் (பெறுகைகள்) அலுவலகம்**

**முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டு எடுகோள்களை அடிப்படையாக கொண்ட முதலீட்டுத் திட்டத்தின் கீழ், மடுல்லா பிரதேச சபையினால் பிரதி தலைமைச் செயலாளரிடம் (பெறுகைகள்) சமர்ப்பிக்கப்பட்ட தவறான பட்டியலின் அடிப்படையில், 2021 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா.995,456 பிரதேச சபைக்கு செலுத்தப்பட்டது. 2022 சனவரி 19 ஆந் திகதி வரையிலும் சுமார் 200 மீட்டர் பிரவேச பாதையை சுத்தப்படுத்தியமையை தவிர வேறு எந்த கட்டுமானப் பணிகளும் தொடங்கப்படவில்லை, மேலும் முன்மொழியப்பட்ட காணி வனப் பாதுகாப்பு திணைக்களத்திடம் இருந்து கையகப்படுத்தப்படவில்லை மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை. | மொனராகலை மாவட்ட வன உத்தியோகத்தர் அலுவலகத்தினால் காணியை கையளிப்பதற்கு தேவையான பரிந்துரைகளை வன பாதுகாப்பு திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ளது. மேலதிக நடவடிக்கைகளை எடுக்குமாறு பிரதேச செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | பூர்வாங்க ஆய்வுகளை நடாத்தாமை மற்றும் போலியான பற்றுச்சீட்டுகளை சமர்ப்பித்தமை தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து, பணியை துரிதமாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.5.13 தலைப்பு 738 – பிரதிப் பொதுச் செயலாளர் (நிர்வாக) அலுவலகம்

### (அ) இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2021 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 21/1596/304/134 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் | அரசு எதிர்கொள்ள வேண்டிய நிதி நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, நிதி ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டாலும், இதுவரையிலும் தொடங்கப்படாத நிகழ்ச்சித்திட்டங்கள், கொள்முதல், கட்டுமானங்கள், கட்டிட சீரமைப்பு மற்றும் மேம்பாடுகள் ஆகியவை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறும், உடன்படிக்கைகளில் ஈடுபடுவதையோ அல்லது மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதையோ அவர்கள் தவிர்க்க வேண்டும் எனவும் குறிப்பிட்டு செலவினங்கைளை உச்ச அளவில் கட்டுப்படுத்த அறிவுரை வழங்கப்பட்டுந்தது. | மாகாணத்தின் அத்தியாவசிய சேவைகளைப் பேணுவது, மனித வளங்களைப் பயன்படுத்துவதில் அக்கறை செலுத்துவது மாகாண அதிகாரிகளின் பொறுப்பாகும் என்பதால், அதற்கேற்ப செய்யப்பட்டுள்ளது. | 2021 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 21/1596/304/134 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

ஊவா மாகாண சபையின் அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களினால் அமைச்சரவையின் தீர்மானத்தை எடுத்ததன் பின்னர் அவ்வாறான பணிகளுக்காக ரூபா.1,158,783,869 செலவிடப்பட்டிருந்தது.

**(ஆ) உள்ளகக் கட்டுப்பாட்டிலான நலிவுகள்**

| | | |
|---|---|---|
| ஊவா மாகாண சபைக்கு சொந்தமான 06 நிறுவனங்களினால் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பணிடங்கள் கிடைத்திராத போது 43 கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் மூலம் ரூபா 105,507,626 கூட்டுத்தொகையான காசோலைகள் வழங்குநர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. மேற்படி உறுதிச்சீட்டுகளிடையே ரூபா 27,735,048 கூட்டுத்தொகையான 07 கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுக்காக பொருட்கள் கிடைத்தமைக்கான போலியான பதிவுகள் இடப்பட்டிருந்தன. | இந்நிலைமைகளை தவிர்க்க முன்கூட்டியே திட்டமிட வேண்டியதன் அவசியம் குறித்து அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டப்பட்டது. | ஊவா மாகாண சபை நிதி விதி 139 இன் பிரகாரம் செயற்படுவதுடன், போலியான பதிவுகளை பயன்படுத்திய அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**(அ) நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் செயற்பாட்டு பணிகளின் பெறுபேறு ரூபா 2,205,982 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் பற்றாக்குறை ரூபா 1,868,759,546 ஆகும்.

## (ஆ) வருமானம் மற்றும் செலவினத்தின் தளம்பல்

**வருமானம்**

| | 2021 | | | 2020 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதிடப்பட்ட | உள்ளபடியான | விலகல் | பாதிடப்பட்ட | உள்ளபடியான | விலகல் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **மாகாண சபை விடயத்திற்கு உரிய வருமானம்** | | | | | | |
| வரி வருமானம் | 1,768,220,000 | 1,513,326,027 | (254,893,973) | 1,708,220,000 | 1,531,152,211 | (177,067,789) |
| வரியல்லாத வருமானம் | 571,780,000 | 612,779,708 | 40,999,708 | 579,780,000 | 500,893,829 | (78,886,171) |
| அரச மானியங்கள் | 28,343,106,749 | 28,343,106,749 | - | 25,476,441,742 | 25,476,441,742 | - |
| கூட்டுத்தொகை | 30,683,106,749 | 30,469,212,484 | (213,894,265) | 27,764,441,742 | 27,508,487,782 | (255,953,960) |

**செலவினம்**

| | 2021 | | | 2020 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதிடப்பட்ட | உள்ளபடியான | விலகல் | பாதிடப்பட்ட | உள்ளபடியான | விலகல் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **மீண்டெழும் செலவினம்** | | | | | | |
| ஆளணி வேதனம் | 22,686,147,768 | 21,985,850,940 | 700,296,828 | 19,254,178,223 | 20,843,181,286 | (1,589,003,063) |
| ஏனைய மீண்அடமும் | 5,489,705,855 | 4,765,456,763 | 724,249,092 | 4,480,933,777 | 4,166,992,029 | 313,941,748 |
| உப கூட்டுத்தொகை | 28,175,853,623 | 26,751,307,703 | 1,424,545,920 | 23,735,112,000 | 25,010,173,315 | (1,275,061,315) |
| அரச முதலீடுகள் | 4,058,000,000 | 3,819,487,572 | 238,512,428 | 1,942,498,447 | 674,302,677 | 1,268,195,770 |
| கூட்டுத்தொகை | 32,233,853,623 | 30,570,795,275 | 1,663,058,348 | 25,677,610,447 | 25,684,475,992 | (6,865,545) |

ஆண்டின் மொத்த வருமானம் ரூபா 30,469,212,484 ஆக காணப்பட்டதுடன், அவற்றுள் ரூபா 28,343,106,749 தொகை அரச மானியங்கள் ஆகும். வரி வருமானம் ரூபா 1,513,326,027 அல்லது மொத்த வருமானத்தின் 5 சதவீதமான வரி அல்லாத வருமானம் ரூபா 612,779,708 அல்லமு மொத்த வருமானத்தின் 2 சதவீதமாக காணப்பட்டது. ஆண்டின் மொத்த வருமானமான ரூபா 30,469,212,484 ஆன மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 26,751,307,703 அல்லது 88 சதவீதமும், அரச முதலீட்டுக்காக ரூபா 3,819,487,572 அல்லது 12 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## (இ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக வைப்புச் செய்யப்பட்டு 02 வருடங்களை கடந்த மீதிகளின் ரூபா 50,050,722 கூட்டுத்தொகை நிதிப் பிரமாணத்தின் நி.பி.571 இன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | நி.பி.571 இன் பிரகாரம் செயற்படுமாறு நிறுவனத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | காலாவதியான வைப்புகள் தொடர்பில் நி.பி.571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### மாகாண அபிவிருத்தி திட்டம்

மீளாய்வாண்டுக்காக மாகாண அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புதிய வேலைகள் மற்றும் புத்துருவாகும் வேலைகளுக்காக மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 4,085 மில்லியனான 2257 செயற்திட்ட முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. அந்த செயற்திட்ட முன்மொழிவுகளின் செயன்முன்னேற்றம் பின்வருமாறு

| செயற்திட்ட விபரம் | புதிய பணி முன்மொழிவுகளின் எண்ணிக்கை | புத்துருவாகும் பணி முன்மொழிவுகளின் எண்ணிக்கை | மொத்த பணி முன்மொழிவுகளின் எண்ணிக்கை | மொத்த பணிகளினதும் மதிப்பீட்டு பெறுமதி |
|---|---|---|---|---|
| | | | | ரூபா மில்லியன் |
| முழுமையாக நிறைவு செய்யப்பட்ட | 1905 | 33 | 1938 | |
| 50 சதவீதத்தினை விட அதிகமாக நிறைவு செய்த | 160 | 29 | 189 | 4,085 |
| 50 சதவீதத்தினை விட குறைவாக நிறைவு செய்த | 98 | 15 | 113 | |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆரம்பிக்கப்பட்டிராத | 8 | 0 | 8 | 4,085 |
| சர்ச்சைக்குரிய / சிக்கலான நிலைமைகளின் அடிப்படையிலான | 9 | 0 | 9 | |
| | ------ | ----- | ------ | |
| மொத்தம் | 2180 | 77 | 2257 | |
| | ==== | === | ==== | |